THE GARDEN OF THE HEART.

இதய சிங்கார வனம்

AN ANGLO-VERNACULAR MAGAZINE FOR INDIAN LADIES.

January, 1912.

CONTENTS.

Introductory - - THE EDITORS.

The King's Coronation.

Needlework Patterns.

A Legend of Chamba MISS DALTON.

A Bird's Eye View of London MISS K. J. MACFEE, B.A.

The Well of Truth.

A Talk about the Stars MR. J. HARVEY.

WOMEN'S AUXILIARY OF THE C.L.S. FOR INDIA,

35, John Street, Bedford Row, London, W.C.

இந்திய ஸ்திரீகளுக்கான பத்திரிகை

இந்திய சிங்கார வனம்

உவாட்டன், தீவர் என்ற கன்னிகா பெருமாட்டிகளால் நடைபெறுவது

வயது 1 ஜனவரி 1912 இலக்கம் 1

நாமின்னார் என்னும் முன்னுரை

நேச சகோதரிகளே,

இந்தப் புது இனிய காலம்போக்குப் பத்திரிகை உங்களுக்கு விருப்பமாயிருக்கும் என்று நினைக்கிறோம். நீங்கள் புத்தியைக்கொண்டு ஆராய்ச்சி செய்கிற பலவேறு விஷயங்களைப்பற்றி அறிவு சம்பாதித்துத் தருவதும், விடுதி நேரங்களில் மனோரஞ்சிதமாய் வாசிக்கத்தக்க காரியங்களைச் சொல்வதுமே இதின் நோக்கம்.

இதின் பொருள்விஷயங்கள் இங்கிலீஷிலும் உங்கள் சுய பாஷையிலும் வெளிப்படுமாதலால், இரண்டையும் ஒத்துப் பார்த்து ஆங்கில பாஷையில் நீங்கள் விர்த்திபெறலாகும். சில சிறந்த சித்திரத் தையல்மாதிரிகள், நம் அரசிகள் கதை, அந்நிய தேச நகர்கள், அவற்றில் வசிப்பவர்கள், எட்டாத் தொலையான இடங்கள்—அதாவது, நம் தலைக்குமேல் இருக்கிற வானமும் அதில் மினுக்குகிற நட்சத்திரங்களும் — ஆகிய இவைகளைக் குறித்துச் சொல்ல விஷயங்கள் வைத்திருக்கிறோம். இம்மாதிரி விஷயங்கள் எப்படி உயரப்பார்த்தும், எப்படிச் சூழப்பார்த்தும் பயனடையலாம் என்று உணர்த்தும். உள்ளே பார்த்துப் பயனடையும் விதமும் அறியப் பிரியப்படுவீர்கள். இங்கு உள் என்பது வீடு. உங்கள் வீடுகளைச் சௌக்கியகாமும் வசிக்க இனிமையுமாக்கி, உங்கள் பிள்ளைகளைப் பின்னுக்கு உங்களுக்கு உதவியும் தேசத்திற்கு ஆசீர்வாதமுமாய் வளர்க்கத் தெரிவது இன்பமாயிருக்கும். புத்திசாலிகளான சில இந்திய குலமகள்களுதவி நமக்குக் கிடைத்திருக்கிறது. உங்கள் வீட்டுச் சிறுவர் சிறுமியருக்காக ஒரு பக்கத்தில் நல்ல கதை வரும். உலகத்தில் நிகழ்ந்துள்ள ஏதேனும் பிரியப்படத்தக்க விஷயமும் வரும்.

இந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்து 'இந்திய சிங்கார வனத்தில்' வந்து, அவ்வன மரங்களிலுள்ள பூக்களையும் கனிகளையும் பறித்து அநுபவிக்க உங்களை அழைக்கிறோம். முக்கியமாய், அதின் தூரவண்டை நீங்கள் உட்கார்ந்து அதில் விளையும் விடாயடக்கும் குளிர்ந்த நீரை நீங்கள் பருகவேண்டும். அது தேவனுடைய திருவாய் மொழிந்த திருச்சத்திய வசனம் ஊட்டுகிற கல்விதான். அது ஒன்று இல்லாமல் இவ்வுலகிற்கே மாத்திரம் உதவும் அறிவெல்லாம் பயன்தருவதில் குறைபாடுடையனவாம். இந்த இனிய காவில் எங்களுடன் நீங்களும் பல அநேகமுறை நடந்து களிப்பீர்கள் என்று நம்புகிற உங்கள் அன்பர்கள்,

பத்திரிகாசிரியைகள்.

பஞ்சவராகிய ஜியார்ஜ் மன்னரின் மகுடாபிஷேகம்

நம் அரசர் அரசி இவர்களின் மகுடவர்த்தனமே போன வருஷம் நிகழ்ந்த மகா சம்பவம். அது இங்கிலாந்தின் பூர்வ ஆலயங்களிலொன்றான உவெஸ்ட் மினிஸ்டர் ஆபேயில் நடைபெற்றது. அப்பொழுது பட்டவர்த்தனரும் துரைத்தனத்தில் பெரியதனக்காரரும் ஆன ஏழுநூற்றவர் அவ்வுற்சவத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். இராஜ பவனி ஊர்ந்த வீதிகளில் இன்னும் பலவாயிரம் பேர் நெருங்கிக் காட்சி பார்த்தார்கள். 'அரசனும் அரசியும் தம் அரமனையிலிருந்து ஆலயம்வரை

A Magazine for Indian Ladies.

The Garden of the Heart.

Edited by MISS WAUTON *and* MISS DEWAR, *late of Amritsar.*

VOL. I. JANUARY, 1912. No. 1.

Introductory.

DEAR SISTERS—

WE hope you will welcome this new Magazine. Its object is to supply information on various subjects which we know your minds are enquiring about, and also to furnish you with some interesting reading for your leisure hours.

As the articles will be written in English as well as in your own vernacular, you will be able, by comparing the two, to make progress in your study of the English language. We are preparing for you some good fancy needlework patterns, the Story of our Queens, a description of foreign cities and the people who live in them, and some talks about regions still further away—the sky over our heads and the stars which appear in it. Subjects like these will teach you how to look *around* and how to look *up*. You will also like to learn how to look *within*—that is, into your own home and study the best way of making your houses healthy and pleasant to dwell in, and how to bring up the children to be a comfort to their parents and a blessing to their country. We are enlisting the help of some clever Indian ladies to give advice on these matters. On one page of the magazine you will probably find a pretty story to amuse and interest the younger members of your household, and you may look out for some notes on any interesting event that may have happened in any part of the world.

So we invite you, by becoming a reader of these pages, to enter "the Garden of the Heart" and gather the fruit and flowers which grow on its trees. Most of all do we invite you always to sit down by "the well" and drink of its cold, refreshing water—in other words, to read carefully what you will always find, some teaching from God's own Word of Truth. Without this all other knowledge, which belongs to this world only, would do us very little good.

Hoping that from time to time you will enjoy many pleasant walks with us in this garden,

We remain, with many salâms,

Your affectionate friends,

THE EDITORS.

The Coronation of King George V.

THE great event of the past year has been the crowning of our King and Queen. The ceremony took place on 22nd June in Westminster Abbey, one of the oldest and most beautiful churches in England. About seven thousand people from amongst the nobility and those who hold high positions in the State, were invited to be present there

on the occasion, and thousands more filled the streets through which the royal procession passed. The King and Queen drove in their state coach, drawn by eight cream-coloured horses, from their palace to the church. When they reached the door, silver trumpets were sounded, and the organ was played, and the choir-boys sang "Long live the King!" as they passed up the church to the chairs which had been placed for them. First the King was presented to the people, and with glad shouts of joy they acknowledged him as their lawful Sovereign, to whom they would always render homage and service. After some prayers, and an exhortation from one of the chief bishops, an open Bible was laid before the King. Putting his hand upon it and kissing it, he took a solemn oath to rule his kingdom according to the statutes agreed upon by Parliament, to maintain the laws of God, and the established religion of the realm, and to exercise law and justice, tempered by mercy. He was then anointed with pure oil on his head, breast and hands, signifying that he was consecrated in glory, knowledge, and strength, to the service of God for his people; and he was also girded with three swords. When the sword of state was brought to him, prayer was offered that with it he would stop the growth of iniquity, protect the holy Church of God, and help and defend widows and orphans. In his hand was placed a globe with a cross over it, and these words were addressed to him: "When you see this orb, set under the cross, remember that the whole world is subject to the power and empire of Christ our Redeemer." This being removed, the King next received two sceptres, and a ring was put on his hand. Then the chief bishop held up the imperial crown, glittering with more than 3,000 gems, and slowly he placed it on the royal head, with the prayer: "God crown you with a crown of glory and righteousness." At this great moment an imperial salute was fired, both from the Tower of London and St. James' Park. A great shout of "God save the King!" resounded on all sides, and the message was flashed to India and to all parts of the Empire that the crowning had taken place. When the noise of the shouting was over a hymn was sung, bidding the King be strong and brave, and he was shown how to be strong and full of courage. A Bible was presented to him with these words: "Our gracious King, we present you with this book, the most valuable thing that this world affords; here is wisdom, this is the royal law, these are the lively oracles of God." A prayer of blessing was then offered, and when this was ended the King was seated on his throne, and the nobles of Church and State, including the young Prince of Wales, came to do him homage, laying before him the coronets which they had put on at the moment of his crowning. After the Queen, wearing a magnificent robe of purple velvet embroidered with gold, had been anointed and crowned, bowing reverently to her royal husband as she passed, she took her place on the throne at his side. Then, taking off their crowns, together they took part in a very solemn service of worship and consecration, laying down in the most sacred part of the sanctuary golden gifts of great value as offerings of thanksgiving to God.

This being concluded, with crowns on their heads and sceptres in their hands, they again entered the grand coach, and through streets filled with thousands of their loving, rejoicing people, they returned to their home. In the long line of carriages which escorted them were seen many Indian rulers and princes. The presence of the Begam of Bhopal and her suite showed that the ladies of India were welcomed amongst those who came from all parts of the Empire to manifest their loyalty, and to do honour to our great and good King George V.

வெண்ணிறப் புரவிகள் எட்டுப் பூட்டின அரச கம்பீர இரதமூர்ந்து ஆலயவாசலை யணுகவே, வெள்ளிக்காளங்கள் முழங்கி, பெருங்கின்னரம் ஓசையிட்டது. வாசலினின்றும் அவர்களுக்கமைத்திருந்த ஆசனங்கள்வரை அரசனும் அரசியும் போம்வரை பாடகர்ச்சிறுவர் 'அரசபல்லாண்டு' பாடினார்கள். முந்த முந்த அரசனைப் பிரசைகள் ஏற்றுக்கொள்ளக் கேட்கப்பட்டது; அவர்கள் அவரைத் தங்கள் நியாயமான மன்னனாக அங்கீகரித்து எந்நாளும் அவருக்குப் பணிந்து ஊழியஞ்செய்ய ஒப்பினார்கள். ஜெபங்களும் பிரசங்கமும் சிரேஷ்ட கண்காணியொருவரால் செய்தானபின் திறந்த திருவேதாகமம் அரசனுக்கெதிரில் வைக்கப்பட்டது. அதன் மேல் கையூன்றி அதை முத்தஞ்செய்து, பார்லிமெந்து சபையால் ஏற்பட்டுள்ள சகல ராச்சிய முறைகளுக்குமேற்ப அரசுபுரிந்து, தேவனுடைய பிரமாணங்களைப் பாதுகாத்து, ராச்சியத்தில் ஏற்பட்டுள்ள மார்க்கானுசாரத்தைக் கைதூக்கி, தேச சட்டத்தையும் நீதிநியாயத்தையும் இரக்கம் ஊடாட நடைபெறச் செய்வேன் என்று மன்னனவர் பக்தியுடன் சத்தியம் செய்தார். அதன்பின், மலினமில்லாத எண்ணெயால் அவரது சிரசும், மார்பும், கரங்களும் பூசப்பட்டன. அரசன் தேவனுடைய சனத்திற்காகத் தேவஊழியனாய் அபிஷேகம் பண்ணப்பட்டார் என்பதே அதின் அர்த்தம். இராசாங்கப்பட்டயம் அவருக்குக் கொடுபட்டபோது, அதனால் அவர் அக்கிரமத்தை யடக்கி தேவனுடைய பரிசுத்த சபையைப் பாதுகாத்து, விதவைகளையும் அநாதபிள்ளைகளையும் ஆதரிக்கத் திருவருள் கிடைக்கவேண்டுமென்று ஜெபங்கள் செய்யப்பட்டன. பூமண்டல உருண்டை உச்சியில் சிலுவை பதித்ததாய் அவருக்குத் தரப்பட்டது. அந்நேரத்தில் அவர் செவியில் பட பின்வரும் மொழிகள் கூறப்பட்டன: 'சிலுவையின் பாதத்தில் இந்தப் பூவுருண்டை யமைத்திருப்பதை நீர் பார்க்குந்தோறும் இப்பூமண்டலமெல்லாம் நம் இரட்சாநாயனாகிய கிறிஸ்துவுக்குக் கீழமைந்த அவருடைய ராச்சியமென்பதை மறவாமல் மனதில் வையும்.' இது போனபின், இரண்டு செங்கோல்களும், ஒரு கணையாழியும் அவர் கரத்தில் இடப்பட்டன. அதானபின் அதி சிரேஷ்ட கண்காணியார் 3,000 நவரத்தினங்கள் பதித்து ஜொலித்த மகா மண்டலேஸ்வர கிரீடத்தை அரசன் சிரமீதுவைத்து: 'தேவன் உம்மை மகிமையினாலும் நீதியினாலும் முடிசூட்டுவாராக' எனச் செபித்தார். இந்த மகா முக்கிய நேரத்தில் லண்டன்நகர கோபுரமாளிகையிலும் ஸெயின்ட் ஜேம்ஸ் பார்க்கிலும் அரசுவாழ்த்துக் குண்டுவெடி முழக்கமிட்டது. சகல திக்குகளிலும் 'மன்னன் வாழ்க' என்னும் மங்கலகோஷம் ஆர்ப்பரித்தது. இந்தியாவுக்கும் பிரிட்டிஷ் ராச்சிய மண்டலங்களுக்கும் முடிசூட்டுச் சடங்கு நிறைவேறிவிட்டது என்கிற மின்செய்தி அனுப்பப்பட்டது. முழக்கம் அமர்ந்தபின், ஒரு கீதம் பாடி அதில் அரசன் பலத்தத் திடமனதாயிருக்கும் விதம் காட்டப்பட்டது. அதன்பின் ஒரு திருவேதாகமம் கொடுக்கப்பட்டது. அவ்வேளையில்: 'எங்கள் காருண்ய மகா ராஜாவே! தங்களுக்கு இப்புத்தகத்தைப் பரிசளிக்கிறோம். இப்பூவுலகு தரும் அரும்பொருள் யாவினும் இது மேலான விலைபெற்றது. இதிலே ஞானம் வாசஞ்செய்கிறது. இது அரசருக்குச் சட்டப்புத்தகம். இதிலே தேவனுடைய ஜீவனுள்ள வாக்குகள் இருக்கின்றன' என்பது சொல்லப்பட்டது. தேவாசீர்வாதத்துக்காக ஜெபம் செய்தானபின், அரசன் தம் சிங்காசனத்தில் வீற்றிருக்க, உவேல்ஸ் இளவரசர் உட்பட ராச்சியத்தின் சகல வைதீக லவுகீக பிரபுக்களும் மன்னனுக்குமுன் தம் தம் மணிமுடிகளை இறக்கிவைத்து இராஜசேவை செய்துகொண்டார்கள். தங்க இழைகளால் சித்திரவேலைப்பாடமைந்த தாமிரவர்ண மகமல் பட்டாடை தரித்து நம் அரசியார் தைலம் பூசப்பெற்று முடிசூட்டப்பட்டபின், தம் நாயகருக்கு அதிவிநய சிரக்கம்பனம்செய்து தமக்கிட்டிருந்த சிங்காசனத்தில் வீற்றார். அது அரசருக்கருகிலிருந்தது. இதெல்லாம் ஆனபின் மகா பக்தி முக்கியத்துடன் ஆராதனை வைக்கப்பட்டது. அதில் அரசனும் அரசியும் மகுடங்களைக் கழற்றிவைத்துப் பங்கடைந்து, சிறந்த ஓர் இடத்தில் தேவனுக்குத் தாங்கள் செலுத்தக் கொண்டுவந்திருந்த விலையுயர்ந்த தங்க வெகுமதிகளை நேர்த்திக் கடனாக வைத்தார்கள்.

மகுடாபிஷேகம் முற்றுப்பெற்றபின் கிரீடதாரர்களாயும் செங்கோலினராயும் நம் மன்னரும் அரசியாரும் இரதமேறி தம் அரமனைக்கேகினர். எண்ணிறந்த சிறந்த வாகனங்கள் புடைசூழ்ந்து சென்றன. அவ்வாறு புடைசூழ்ந்த ராஜபவனியைச் சிறப்புச் செய்தவர்களுள் அநேக இந்திய அரசர்களும் விசேஷமாய் போப்பால் மகாராணியும் இருந்தார்கள்.

Needlework Patterns.

(From the "Girls' Own Paper.")

1.—Rosette Edging (Crochet).

USE Ardern's Cotton, No. 40. Start with 10 chain, making the first one very loose. Into it make 2 treble, 5 chain, 2 treble, 7 chain, 2 treble, 5 chain, 2 treble. *Turn with 9 chain, and in middle space make 2 treble, 5 chain, 2 treble, 7 chain, 2 treble, 5 chain, 2 treble. Repeat this row once. 5 chain, into the side 9 chain make 6 loops of 16 chain, 8 chain 1 double crochet into top of last loop, 3 chain 5 treble into each loop, no chain between.

Turn at last treble, place 6 chain, 1 double crochet, over each group of 5 treble below. Turn and fill in with 7 double crochet in each space. Catch the end of this row into adjoining scallop.

From the last double crochet, turn and make 8 chain, 1 double crochet over each group of double crochet below. Then fill in with 9 double crochet in each.

From the last double crochet chain 5, and go down to the middle space; into it make 2 treble, 5 chain, 2 treble, 7 chain, 2 treble, 5 chain, 2 treble. Repeat from *.

Add a straightening line at sewing on edge of chain and double crochet.



1.—Rosette Edging.



2.—Shell Edging.

2.—Shell Edging (Crochet).

Use Ardern's No. 36 cotton.

First row.—Start with 7 chain, making the first one loose; into this make 3 treble, 3 chain, 1 treble, 3 chain, 1 treble.

Second row.—Turn with 6 chain, into first space make 3 treble, 3 chain, 1 treble, 3 chain, and in last space make 8 treble.

Third row.—Turn with 3 chain, make 2 treble in the top of each treble, 3 treble in the three chain, then in next space make 3 treble, 3 chain, 1 treble, 3 chain, 1 treble.

Fourth row.—Turn with 6 chain, into first space make 3 treble, 3 chain, 1 treble, 3 chain, 1 treble, 3 chain, 1 treble into top of the 3rd treble below, then 1 treble into top of every other one below, putting 2 chain between each.

Fifth row.—Turn with 3 chain, in each space put 3 treble, right along to the central loop in outer edge, in which is put the usual 3 chain 1 treble, 1 treble.

Sixth row.—Same as fourth row.

Seventh row.—Turn, put 2 double crochet into each space with 4 chain between, end with the usual 3 treble, 3 chain, 1 treble, 3 chain, 1 treble into last space.

Eighth row.—Turn with 6 chain, into first space make 3 treble, 3 chain, 1 treble, 3 chain, 1 treble.

Repeat from second row.

Add a straightening line at sewing on edge of chain and 2 treble in each loop.

A Legend of Chamba.

"TELL me a story!" pleaded the English child, as, weary with play, she nestled at her mother's knee, in the cool of the evening.

Lovingly the mother smiled down upon the eager, upturned face.

"An English story?" she asked.

The broad verandah looked out over an Indian plain, yet, evening by evening, the two loved to journey in fancy to the far-off English home which the little one had never seen. But to-night, moved by some changeful impulse, she shook her head.

"No, please, an Indian story!"

There was a moment's pause; then the mother's voice echoed softly through the cool silence.

"This is the legend which the women of Chamba tell, as they go on pilgrimage to the Rani's tomb. Many hundred years ago the city lay fair and serene upon the mountain slope, even as it lies to-day. Yet the hearts of the daughters of Chamba were sad, and their lives burdened by weary toil. Day after day, beneath the scorching sunbeams, they had to journey long distances to fetch water from the river Ravi, which flowed through a rocky valley beyond the city. Now it came to pass at length that the Rajah looked with pity upon their ceaseless labours, and gave orders that a channel should be cut in the rock, through which the waters might be brought into the city.

"Gratefully the women called down blessings upon his head; but, alas! their hopes were raised only to sink again—the channel was cut, yet the waters would not flow through it.

"Then the Rajah consulted a Brahmin, and this was the word that came to him. 'The god of the river demands a victim. Let a grave be dug on the spot whence the waters should flow, and thy son and heir be laid within it, a living sacrifice, and they will gush forth clear and sparkling.'

"The prince and the father struggled together within the Rajah's breast, but the prince conquered. Bowing his head, he made answer, 'I have promised the daughters of my people that the life-giving stream shall be brought within reach of their frailest and feeblest, and I will not fail them.'

"But the Rani, standing by, raised her eyes to her husband's, and they shone with a strange light. 'He shall not die!' she said, quietly.

"His eyes met hers, sadly, yet firmly. 'Shall my word fail? Shall the women toil on in hopeless weariness?'

"The Rani's eyes did not fall. 'Our son shall not die,' she repeated, steadily; 'neither shall the women suffer. Behold, I, even I, the Rani, will lay me down in the open grave, gladly and peacefully, as upon my bed, in the place of the boy and for love of the daughters of my people.'

"Gentle and meek had the Rani ever been, but now on a sudden a new strength seemed to have possessed her, and her husband bowed before it, as before the voice of a god. Even as she had said, so it was done. Calmly and gladly the Rani laid her down in the open grave, and lo! when the sacrifice was accomplished, the waters gushed forth; and to this day, as the daughters of Chamba fill their pitchers at the bubbling spring, they bless the memory of her who laid down her life for her people."

The English child flung back her head with an indignant gesture; her eyes were dim with tears.

"Oh, mother, I cannot bear it! It is a cruel story! How could they make her do it?"

The mother drew the small, quivering form closer to her. "They did not *make* her do it, darling."

"I know. The brave, noble Rani! Oh,

சம்பா நகரார் கதை

விளையாடி அலுத்து அந்திநேரத்தில் குளிர் வாடை வீச தாய் மடியண்டை இருந்துகொண்டு, ஒரு இங்கிலீஷ் பெண் ‘எனக்கொரு கதை சொல்லுங்கள்’ என்றாள். ஆவலாய் தன் முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்த மகள் முகத்தைத் தாய் புன்னகையுடன் அன்பு பொங்க நோக்கி, ‘இங்கிலீஷ் கதை வேண்டுமோ?’ என்றாள். விசாலமான விராந்தாவுக்கெதிரில் ஒரு இந்திய மைதானம் இருந்தது. அந்திப்பொழுதுதோறும் தாயும் மகளும் எட்டாத் தொலையில் இருந்த தங்கள் சொந்த இடத்தை நினைவினால் சுற்றித் திரிவார்கள். மகள் இன்னும் அவ்விடத்தைக் கண்ணால் கண்டவளல்லள். இன்று அந்த மகள் அதைப்பற்றிய நினைவு மாறி:

‘இல்லை, தயவுசெய்து ஒரு இந்திய கதை சொல்லுங்கள்’ என்றாள்.

சிறிதுநேரம் பொறுத்து தாய் பின் வருமாறு சொல்லலானாள் :—

‘சம்பாநகர்ப் பெண்கள் இராணிசமாதிக்கு யாத்திரைப் போகும்போது சொல்லுகிற கதை இது. இப்போதுள்ள மாதிரியே பல நூறு வருஷங்கள் முன்னும் சம்பாவூர் மலைச்சரிவிலேதான் இருந்தது. இரவியாற்றிலிருந்து அவ்வூருக்குத் தண்ணீரெடுத்து வருவார்கள். அவ்வாறு வெகுதொலைக்கு அப்பால் பாறையுள்ள பள்ளத்தினூடே ஓடிற்று. அவ்வூர்ப் பெண்கள் தீப்போல் சுடும் வெய்யிலில் அவ்வளவு தூரம்போய் நீர் திரட்டிவருவது பெரும்பாரமும் வாதையுமாயிருந்ததினாலும் அவ்வேலை தினம் செய்யவேண்டுவதாயிருந்ததினாலும் மனஞ்சோர்ந்துபோனார்கள். அதைக் கண்டு அவ்வூராளும் அரசன் கல்தச்சரைவிட்டு மலைச்சரிவில் ஒரு கால் வெட்டுவித்து அதன் வழியே ஊருக்கு நீர் வரும்படி செய்வித்தான். செய்வித்தும், தண்ணீர் வரவேயில்லை. அதினால் முந்தி மகிழ்ந்து அரசனைப் பல்லாண்டு வாழ்த்தின பெண்கள் இப்போது மனங் களைத்துப்போனார்கள்.

‘அரசன் ஒரு அந்தணனையடுத்துச் சோசியம் கேட்க, அவன் : ‘இந்த ஆற்றுத்தெய்வம் ஒரு காவு கேட்கிறது. எவ்விடத்திலிருந்து நீர் புரண்டுவரவேண்டியதோ அவ்விடத்தில் ஒரு சமாதி தோண்டி அதில் உன் பட்டத்து மகன் உயிரோடே தன்னைப் பரித்தியாகம் செய்யவேண்டும். உடனே தெண்ணீர் துள்ளிப் பாயும்’ என்றான். அந்நேரத்தில் அரசனுக்குள் அரசகடமைக்கும் புத்திரவாச்சல்லியத்துக்கும் கடும்போர் நேர்ந்து, கடைசியில் அரசகடமை ஜயமடைந்தது. ‘உடம்பாலாற்றுதவனும் எளிதில் நீர்கொள்ளுமாறு செய்வேன் என்று என்னூர்ப் பெண்களுக்கு நான் அளித்த வாக்குத் தவறேன்’ என்று தலைகுனிந்து மொழிந்தான்.

‘அந்நேரத்தில் அருகிலிருந்த ராணி மிருதுமொழியாய்: ‘அவன் சாகவேண்டியதில்லை’ என்ன, அரசன் அவளை விசனத்துடன் நோக்கி ‘என் வாய்மொழி தவறலாமா? இவ்வூர்ப் பெண்கள் எளிதில் நீர்கொள்ளும் நம்பிக்கையில்லாமல் தடுமாறவேண்டுமோ?’ என்றான். ராணி நிமிர்த்தின கண் தாழ்த்தாமல், ‘நம் மகனும் சாகவேண்டுவதில்லை, நம்மூர்ப் பெண்களும் வருந்தவேண்டுவதில்லை. அவனுக்குப் பதில் நம்மூர்ப் பெண்களுக்கு இரங்கி நானே சமாதியில் இறங்கி, என் பஞ்சணையில் உறங்கப்போவதெப்படியோ அப்படிப் படுத்துக்கொள்வேன்’ என்றாள். அவள் கணவனும் அதற்குச் சம்மதி தர, அவள் சொன்னபிரகாரமே திறந்திருந்த கல்லறையிலிறங்கிப் படுத்தாள். காவு கொடுத்த அந்த நிமிஷம்ம தண்ணீர் பிரவாகித்து, வெட்டின காலில் ஓடிற்று. இந்நாள்வரையும் அந்நகர் மாதுகள் அந்தக் காலில் நீரெடுக்கும்போதெல்லாம் தன் பிரசைகளுக்காக உயிர்கொடுத்த ராணியை நினைத்துப் புகழுகிறார்கள்.’

அந்த இங்கிலீஷ் பெண் கண் கசிந்தவளாய் மனம் நொந்து ‘அம்மா, இதென்ன கொடுமை! அவளை அப்படிச் செய்யத் தூண்டலாமா?’ என்ன, தாய் அந்தச் சிறுமியை அருகில் அணைத்து: ‘குழந்தாய், அப்படிச் செய்ய அவளை ஒருவரும் தூண்டினதில்லையே’ என்றாள்.

மகள் : ‘ஆமாம். அந்தத் தைரிய நெஞ்சியான பெருந்தகைமையுள்ள ராணி எப்பேர்ப்பட்டவள்! அவள் மகன் எல்லாந் தெரிந்தபின் எப்படி அழுதிருப்பானோ! எல்லாரும் அவளை எப்படிப் புகழ்ந்திருப்பார்களோ! எப்பேர்ப்பட்ட நேசம் அவள்மேல் வைத்திருப்பார்களோ! எனக்கு அவள்மேல் அன்பு உண்டாகிறதே. அவள் செய்தது சரியான செய்கை என்று நீங்கள் ஒப்பமாட்டீர்கள் அல்லவா, என் தாயே. அவர்களுக்கு அறிவு வந்திருந்தால்—’

how her son must have cried when he knew, and how everybody must have loved her! *I* love her; but, mother, do not say that it was right! If they had known—"

"If they had known that the heart of God is more loving and tender than the heart of any of His children, they would not have dreamed that He called upon them for such a sacrifice. But, little one, the story is not all dark. Through the darkness of that terrible mistake there shines out, pure and bright, the love that gave itself freely for the life of others. Darkness and cruelty will pass away; love and sacrifice remain. And wherever the story is told, while the world lasts, the memory of the Rani, who sacrificed herself for love's sake, shall be loved and honoured."

A Bird's Eye View of London.

A VAST bewildering maze of houses, crowded together in long and sometimes narrow streets; large and brilliant shops in certain places; a ceaseless stream of traffic passing to and fro; with here and there a green square or park, forming a peaceful resting place from the constant hurrying crowds—such might be a stranger's first impression of London, the capital of the British Empire, and the largest city in the world. For more than eight miles the buildings stretch from north to south, and for an even greater distance from east to west; the centre of this great mass being the part called "the City." Many years ago this was surrounded by a big wall, and formed the entire town; but now it is the centre of the nation's trade. Offices of every sort are there; there men buy and sell and transact business, and in the midst stand the Bank of England, the Royal Exchange, and the Mansion House, the dwelling of the Lord Mayor of London.

St. Paul's Cathedral, London.

During the morning and afternoon the streets of "the City" are crowded with men hurrying backwards and forwards on business errands. About 5 o'clock, however, the offices close, and there is a rush for trains and omnibuses, and the busy crowd of workers pass quickly away to their homes, and "the City" is left almost deserted, for hardly anyone lives within its precincts, the residential parts of the town being mostly on the outskirts.

Towards the east of "the City," there stretches the poorer part of London, where live the thousands of men and women who earn their living in the great factories and workshops, making for the most part materials for food and clothing. Away to the west are the dwellings of the richer inhabitants. Here the houses are larger, and often surrounded by gardens, chief among them being Buckingham Palace, the residence of the King and Queen, and Kensington

'தேவனுடைய உள்ளத்தில் அவருண்டாக்கின மானிடருள்ளத்திலிருக்கிற அன்பைவிட் மிக அதிக அன்பும் உருக்கமும் உண்டு என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தால், அவர்களை அப்பேர்ப் பட்ட காவு தாக் கேட்டே இரார் என்று உணர்ந் திருப்பார்கள். ஆயினும், மகளே, இந்தக் கதை முற்றும் இருட்டுக் கதையன்று. அதிலே தன்னைப் பிறர் வாழும்பொருட்டுத் தந்த அன்புமணம் வீசுதே. இருட்டும் கொடுமையும் ஒருநாள் ஒழியும். அன்பும் பிறருக்காகத் தன்னைத் தியாகம் செய்தலும் எந்நாளும் ஒழியாது நிலைக்கும். இந்தக் கதை சொல்லப்படும் இடமெல்லாம் அன்புக்காக, உயிர்கொடுத்த இந்த ராணியின் ஞாபகம் பிரியத்துடன் போற்றப்படும்.' இப்படித் தாய் சொல்லி முடித்தாள்.

லண்டன்மா நகர அதோமுகத் தோற்றம்

ஒன்றுடன் ஒன்று மிக நெருங்கி வழி மருளச் செய்யும் மாளிகைத் திரள் மிக நீண்டும் சில பாகங்களில் ஒடுக்கமாயுமிருக்கிற வீதிகளில் உள; சில விடங்களில் மிகப் பெரிய காம்பீர காட்சியுள்ள ஷாப்புகள்; நேரும் எதிரும் ஆற்றுப் பாய்ச்சல் ஒத்த வியாபாரப் போக்குவரவு; சிற்சில பாகங்களில் ஒய்ந்து அநுபவிக்க இனிய பசிய பார்க்குகள்; பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தின் தலைநகரும் உலகத்தின் பட்டணங்களுள் இணையில்லாப் பெரிதுமான லண்டனை முதல் முதல் பார்க்கிறவனுக்கு முன் சொன்ன நினைவு வரும். எட்டு மைல்களுக் கதிகமாய் வீதிகள் தென்வடலாயிருக்கும்: அதிலு மதிகமான வீச்சில் கீழ்மேலாய் வரிசைப்படும். இந்தப் பென்னம்பெரிய விஸ்தீரணத்தின் மைய பாகமே 'நகரம்' என்று சிறப்புப் பெயர் பெறும். வெகு அநேக வருஷங்கள்முன்னர் இது மதிள் சூழப்பெற்று, அக்காலத்தில் இதுவே லண்டன் என்ற பெயர் வாய்ந்திருந்தது. இக்காலத்தில் அதுவே அத்தேசத்தாரின் வியாபார நடுநாயகம். சகல ஆபீசுகளும் அதற்குள்ளேதான்; சகல கொடுக்கல் வாங்கல் வியாபாரமெல்லாம் அங்கே தான்; பாங்க் ஆவ் இங்கிலாந்து, ராயல் எக்ஸ்சேஷ்ஞ்சு, மான்ஸன் ஹவுஸ் இந்த மாளிகைகள் எல்லாம் அவ்விடத்தனவே. லண்டன் நகருக்கதிகாரி மான்ஸன் ஹவுஸில் வசிக்கிறார்.

முற்பகலிலும் பிற்பகலிலும் இந்த 'நகர' பாகம் முன்போவாரும் எதிர்போவாருமான வேலையாட்கள் நிறைந்ததாயிருக்கும். பிற்பகல் 5-மணியானதும் ஆபீசுகள் முடியும். அந்நேரம் ஒருவரை யொருவர் நெருக்கி ரயில் வண்டி, வேறு வண்டி, இவைகளைத் தேடி யோடுவாரைப் பார்க்கலாம். வெகு சீக்கிரத்தில் 'நகரபாகம்' வெறுமையாய் விடும். அதற்குள் குடியிருப்பார் மிகச் சொற்பம். குடியிருப்புப் பாகங்களெல்லாம் பெரும்பாலும் 'நகர்'ப்புறத்தே யிருக்கும்.

'நகர பாகத்திற்குக் கிழக்கே லண்டனின் எளியவர் பகுதியிருக்கிறது. உபயோகபண்டங்கள் செய்யும் சாலைகளிலும் கைத்தொழிற் சாலைகளிலும் வேலைசெய்து பிழைக்கிற ஆண் பெண்கள் இந்தப் பகுதியிலே வசிக்கிறார்கள். செய்யப்படும் உபயோகபண்டங்கள் பெரும்பாலும் உணவுப் பதார்த்தங்களும் உடைகளுமே. மேற்குப் பகுதியில் தனவான்களுடைய வாசஸ்தலங்கள் இருக்கின்றன. அவைகளுள் சிரேஷ்டமானவை நம் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் வசிக்கிற பக்கிங்ஹாம் அரமனையும், நம் அன்னையொத்த மாட்சிமைபெற்ற மாஜி விக்றோரியா அரசியார் பிறந்த கேன்ஸிங்க்டன் அரமனையும் இவைகளே. கேன்ஸிங்க்டன் சிங்காரத்தோப்பிலேகேன்ஸிங்க் டன் அரமனை இருக்கிறது. இவ்வாறே, வேறு மாளிகைகளும் அழகிய அரமனைகளும் வனத்திடை இருக்கின்றன.

தேம்ஸ்நதி மேற்கிலிருந்து கிழக்காக ஓடி நகரத்தின் நடுமத்தியில் பாய்கிறது. பண்டைக் காலத்தில் லண்டனின் ஒரு பகுதியிலிருந்து இன்னொரு பகுதிக்குப் படகு ஏறிப் பிரயாணிகள் செல்வார்கள். தற்காலத்திலோ சரக்கு ஏற்றின படகுகளே அதிற் பெரும்பாலும் செல்வன. நீர் ஏற்றமான காலத்தில் பற்பல சரக்குகள் ஏற்றின படவுகள் நூற்றுக்கணக்காய் நேரும் எதிரும் போகக் காணலாம். செய்துறைகளண்டை சரக்கு இறக்குவதற்கு வந்து நிற்கும் பெரிய நீராவிக்கப்பல்களையும் பார்க்கலாம். கப்பல் செய்யும் துறைகளிலும் சரக்கு அடுக்கும் மேடைகளிலும் பல நூற்றுவரான ஆடவருக்கு வேலை கிடைக்கிறது. ஆற்றின் மேல் சிற்சில தாவுகளில் பென்னம்பெரிய வாரா

Palace, the birth-place of Queen Victoria, which stands in the midst of the beautiful Kensington Gardens.

From west to east, through the very midst of London, there runs the great river Thames. In olden days passengers often went from one part of London to another by boat, instead of travelling by road; but nowadays the boats that pass up and down are mostly full of cargo. Hundreds of barges, laden with goods of many kinds, go up and down with the tide. Large steamers come up to unload their cargoes at the wharves; and hundreds of men find employment at the docks and quays. Here and there the river is crossed by great bridges, over which a constant stream of traffic passes. The newest and largest is the Tower Bridge, and below this the river can only be crossed by ferry, for it becomes gradually wider as it flows on to the sea, passing on its way the docks at Tilbury, whence every Saturday morning the great liners start on their way to India and the East.

Space forbids us to describe London's many famous public buildings, the picture galleries, the ancient fortress called the Tower, the Mint where all the coins of the realm are made, the Law Courts, and the many fine churches. One or two, however, must be mentioned. Towering high above the surrounding shops, warehouses, and offices, right in the midst of the busy life of the city, stands St. Paul's Cathedral, its great round dome visible for miles around. On this spot has stood a Christian Church for over one thousand years, but the present building is of much more recent date. Amid the busy tumult of the city, its majestic grandeur, its lofty height and great broad aisles form a spot of restfulness and peace.

The Houses of Parliament, London.

Of a very different style, and some centuries older than St. Paul's, is London's other most famous church, Westminster Abbey. On the banks of the river Thames stand the far-famed Houses of Parliament, with their immense clock-tower and other smaller towers looking down upon Parliament Square,

வதிகள் உண்டு. அவற்றில் ஓயாத வியாபாரம் பெருகி வழிந்துகொண்டேயிருக்கும். எல்லாத்திலும் புதியதும் பெரியதும் கோபுர வாராவதியே. அதற்கப்புறம் ஆறு கடல்நோக்கிப் போகப் போக அகலம் அதிகப்பட்டுள்ளதாகையால், பாலம் கட்டுவதற்கேதுவில்லை, ஓடமேறியே கடக்கவேண்டும். அப்படி யகன்ற பாகத்திலேதான் தீல்பரிக்கலம் செய்துறையிருக்கிறது. அந்தத் துறையிலிருந்து இந்தியாவுக்கும் கிழக்கத்தி தேசங்களுக்கும் பெரிய பெரிய லைன்ஸ்டீமர்கள் சனி காலைதோறும் புறப்படும்.

லண்டனில் சித்திரப் படங்கள் மண்டபம், கோபுரம் என்ற புராதனக் கோட்டை, ராச்சியத்தின் சகல நாணயங்களும் செய்யப்படுகிற தங்கசாலை, லாக்கோர்ட்டுகள், அழகிய பல ஆலயங்கள், இவையும் வேறும் ஆகிய அநேக பேர்பெற்ற கட்டடங்களை வருணிக்க இடம் போதாது. ஒன்றிரண்டை மட்டும் சொல்லலாம். அநேக ஷாப்புகளும், பண்டசாலைகளும், ஆபீசுகளும் புடைசூழ, நகரத்தின் தொழில்கள், பணிதிகள், உத்தியோகங்கள் கதித்து நடக்கிற இடங்களின் மத்தியில் அர்ச்சியசிஷ்ட பவுல் மகா ஆலயம் இருக்கிறது. அதின் ராட்சத பரிமாணமுள்ள உருண்டை வடிவமான சிகரம் நாற்பக்கமும் வெகு மைல் தொலைக்குத் தெரியும். அது நிற்கிற இடத்திலே அதற்கு முந்தி ஆயிரவருஷங்களுக்கு மேற்பட ஒரு கிறிஸ்தவ ஆலயம் இருந்தது. இப்போதுள்ளது புராதனமானதல்ல, நூதன காலத்தது. நகரத்தின் தொழில்கள் உத்தியோகங்களிடையில் கிளம்புகிற முழக்கங்களுக்கு நடுவே இந்த ஆலயத்தின் மகத்துவ தோற்றம், அதின் உன்னத உயரம், மிகப் பரந்து விசாலித்திருக்கிற அதின் உள்ளிடங்கள், இவையெல்லாம் கூடி அந்த ஆலயத்தை மனஅமைதிக்கேதுவான இடமாக்குகின்றன. லண்டனில் சிறந்த கீர்த்திவாங்கின மற்றொரு ஆலயம் உவெஸ்ட் மீனிஸ்டர் ஆபே. இதின் வேலைப்பாடும் வயதும் பவுல் ஆலயத்துக்குச் சில நூறுண்டுகள் முற்பட்டது. தேம்ஸ் நதிக்கரையில் உலகமெங்கும் புகழ்பெற்ற மகா பார்லிமெந்து சபா மண்டபங்கள் இருக்கின்றன. அவற்றின் மணி காட்டும் உன்னத கோபுரமும் வேறு கோபுரங்களும் சதுரவட்டமாயமைத்துள்ள பார்லிமெந்து மண்டபங்களின்மேல் காம்பீரமாய் எழுந்து விளங்கும். அவற்றிற்கு மிக அணித்தாய் உவெஸ்ட் மீனிஸ்டர் ஆபே ஆலயம் இருக்கின்றது. அதின் வைபவமான சுவர்களுக்குள்ளிட்ட இடத்தில் மனதைப் பரவசமாக்குகிற அநேக ஆராதனைகள் நடந்திருக்கின்றன. அரசர், அமைச்சர், சேனாவீரர், வித்தைவிற்பன்னர், கவிவீரர்கள், இவருள் பிரித்தானியாவுக்குக் கீர்த்தியுண்டாக்கினவர்களுக்கு இங்கே ஞாபகசின்னமிருக்கின்றன. பூர்வ அரசருக்கு மகுடாபிஷேகம் இங்கேதான். நம் ஐந்தாம் ஜார்ஜ் அரசருக்கும் மேரி ராணியாருக்கும் இங்கேதான் அபிஷேகம் போன ஜூனில் நடந்தது. பார்லிமெந்துகளும் மாறலாம், அரசரும் மாறலாம். இந்த ஆலயமோ அழகுற இலங்கி இங்கிலாந்தின் மேன்மைக்குக் காரணம் எதுவென்று சொல்லிக்கொண்டே யிருக்கிறது. அது அத்தேச மனு சரித்துள்ள கிறிஸ்து மார்க்கமே.

and close beside them stands Westminster Abbey, even more famous than they. Within its stately grey walls many a solemn service has taken place; and here are placed memorials to the men who have made Britain great—kings, statesmen, warriors, artists, poets. Far back in history the kings of the land came here to be crowned, and here, last June, took place the Coronation of King George V and Queen Mary. Across the square all Britain's laws are made; within the Abbey Britain's kings are crowned. Parliaments may alter and kings may change, but still the beautiful Abbey stands as a reminder to the world of that whereon all Britain's greatness rests, her Christian faith.

The Well of Truth.

WHAT would a garden be without a well? A dry, barren wilderness. What are our hearts like without God? for He is the fountain of life. They are as hard, and dry, and fruitless as the unwatered garden. Think, too, how dependent we are upon water to satisfy our thirst. Travellers who are making their way through a desert where there is no water must die, if they cannot find it, when their own supply is exhausted. Once, long ago, a mother and her child set out on a journey. A mashaq full of cold water had been given to them when they left home, but they lost their way and had to wander about in the wilderness. The water-bottle was empty, not one drop left, and there was no more to be seen anywhere—nothing but hot, dry sand all around them. The boy became so faint and weary that he could go no further. His mother saw that he was dying, so she laid him under the shade of a small tree, and then she sat down and wept. The boy's father was the good prophet Abraham, and he had taught his son to pray. He prayed there under the bush, and God heard his cry, and sent an angel to show his mother a spring of water. Joyfully she filled the mashaq again; they drank and lived, and were able to complete their journey.

This is a parable. The mashaq is like the teaching of merely human instructors, from which many people drink and try to satisfy themselves. Some of this teaching may be very good, but it is not sufficient, it does not wholly satisfy. Do you not feel, deep down in your heart, that you want an ever-flowing fountain from which you can drink again and again till your whole soul is filled with eternal life—yes, with God Himself—for the heart of every man and woman in the world is thirsting for Him, though everyone does not know it, and He alone can satisfy its cravings. Solomon says: "The well-spring of wisdom is as a flowing brook," so the question is, Where is this wisdom to be found? Has there ever been a Teacher in the world whose words have been pure, unadulterated truth, and whose wisdom and knowledge were infinite? Yes, there was One who came into the world in human form, speaking as a man to men, yet having within Him such a fulness of truth that He claimed to be the very Truth itself. These are His own words: "I am the Way, the Truth, and the Life."

But perhaps you will say, how can we tell that the Teacher you speak of is really what He claims to be? There are several ways of finding this out, far too many to set forth here, so we will mention one only. If you read His life, the most wonderful that was ever written, you will discover that He was entirely free from sin. "Which of you convinceth me of sin?" He said one day to His enemies. How gladly would they have mentioned, when so challenged, any fault, however small, which they had detected in

சத்திய ஊருணி

வாவியில்லாத தோட்டம் என்னத்திற்காம்? அது வரண்டு வனாந்தரமாயிருக்கும். தேவனில்லாத உள்ளம் என்னத்திற்காம். அவரே ஜீவனுக்கு ஊற்று. தேவனில்லா உள்ளம் தண்ணீரில்லாத தோட்டம்போலவே வரண்டு பாழாயிருக்கும். தாகந் தீர்க்கிற தண்ணீர் நம்முயிருக்கு அவசியம். நீரில்லாப் பாலைநிலத்தில் பிரயாணம் பண்ணுகிறவர்கள் தம்கூட எடுத்துப்போகிற தண்ணீர் ஆனபின் வேறு தண்ணீர் காணாவிட்டால் மாண்டே போவார்கள். வெகு பூர்வத்துக்குமுன் ஒரு தாயும் மகனும் பிரயாணம் செய்தார்கள். ஒரு துருத்திநிறையத் தண்ணீர் எடுத்துப்போயும், வழிதவறவிட்டு வனாந்தரத்தில் அல்லாடினார்கள். ஒரே துளியுமீதியில்லாமல் துருத்தித் தண்ணீரெல்லாம் ஆய்விட்டது. வேறு நீரும் அகப்படவில்லை. கண்ணுக்கெட்டின வரையில் கொதிக்கிற மணலாகவேயிருந்தது. பையன் சோர்ந்து இனி நடக்க ஏலாதவனானான். அவன் சாகிற தறுவாயில் வந்திருப்பதைப் பார்த்து, தாய் அவனை ஒரு மரத்து நிழலில் வைத்து எட்டிப்போய் அழுதுகொண்டிருந்தாள். அவன் தகப்பன் நல்ல தீர்க்கதரிசியாகிய ஆபிரகாம். அவர் தம் மகனுக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்திருந்தார். அவன் ஜெபித்ததை தேவன் செவியேற்று அவனுடைய தாய்க்கு ஒரு நீரூற்றைக் காண்பிக்க ஒரு தூதனை அனுப்பினார். அவ்விருவரும் வேண்டுமளவு தாகந் தீர்த்துக்கொண்டு, துருத்தியையும் நிரப்பி எடுத்துக்கொண்டு, போகவேண்டிய இடம் போய்ச் சேர்ந்தார்கள்.

இச்சரித்திரத்தில் ஒரு உவமார்த்தமும் இருக்கிறது. அந்த நீர்த்துருத்தி வெறும் மானிட உபதேசிகளுக்கு ஒப்பு. அதில் குடித்துத் திருப்தியடையப் பார்க்கிறவர்களில் அநேகர் அது முழுத் திருப்திசெய்யப் போதாதிருக்கிறதை யுணருகிறார்கள். உன் முழு ஆத்துமாவும் நித்திய சீவனால், அதாவது, தேவனால் நிரப்பப்படும்வரையில் திரும்பத் திரும்பக் குடித்துக்கொண்டேயிருப்பதற்கு ஒரு வற்றாத ஊற்று அகப்பட்டால் தாவிளை என்று உன் உள்ளத்தின் ஆழத்தில் நீ நினைக்கிறதில்லையா? உலகத்தில் எந்த ஆணும் பெண்ணும் தன் உள்ளத்தில் தேவன்மேல் தாகமெடுத்த பிராணிதான். அப்படித் தாகம் உள்ளே இருப்பது சிலருக்குத் தெரியாமலே இருக்கும். தேவனே அந்தத் தாகத்தைத் தீர்க்க வல்லவர். சாலமோன்: 'ஞானத்தின் ஊற்று பாய்கிற ஆற்றைப்போலிருக்கும்' என்கிறார். இந்த ஞானம் எங்கே அகப்படும்? தன் வாய்மொழி கலப்பில்லாத சுத்த சுயம்பான சத்தியமாயும் தன் ஞானமும் அறிவும் அளவில்லாதாயும் கொண்டு விளங்கின ஒரு குரு இவ்வுலகில் எங்கேனும் உதித்ததுண்டா? மனுஷரோடு மனுஷனாய்த் தோன்றிப் பேசினபோதிலும் 'நானே சத்தியம்' என்று துணிந்து சொல்லக்கூடிய அவ்வளவு நிறைவாய்ச் சத்தியத்தைத் தம்முள் உடையவராயிருந்த ஒருவர் மனுஷ உருவினராய் இவ்வுலகில் உலாவினார். அவர் சொன்னது இது: 'நானே வழி, சத்தியம், ஜீவன்.'

நீர் தெரிவிக்கிற இந்தக் குரு அவர் தம்மைப் பிரஸ்தாபித்த வண்ணமே உள்ளபடி இருக்கிறாரோ என்னவோ, ஆருக்குத் தெரியும் என்பாயானால் அதைத் தெரிந்து அறியப் பல வழிகள் ஏராளமாய் உண்டு. நாம் ஒன்றைமாத்திரமே சொல்வோம். அவருடைய ஜீவிய சரித்திரத்தைப் படித்தால் அவர் ஈஷத்தும் பாவமேயில்லாதவர் என்று அறிவாய். அது அற்புத ஜீவிய சரித்திரம். 'என்னிடத்தில் பாவம் உண்டு என்று உங்களில் யார் என்னைக் குற்றப்படுத்தக்கூடும்?' இப்படி ஒருநாள் அவர் தம் சத்துருக்களைக் கேட்டார். ஒரு அற்ப மாசையாவது அவரிடத்தில் அவர்கள் கண்டதுண்டானால் அதை எவ்வளவு எக்களிப்பாய்ச் சொல்லியிருப்பார்கள், அவர்களோ அதற்கொன்றும் பேசாமல் சும்மா இருந்தார்கள். அவர் செய்திருந்த ஒரு பாவத்தையாவது தப்பிதத்தையாவது காட்டமாட்டாதிருந்தார்கள். அவரைத் தவிர வேறொரு தீர்க்கதரிசி

Him, but they were silent. They could not speak of one sin, or even one mistake, that He had ever made. No other prophet or teacher has ever dared to ask such a question as this, even from His greatest friends and admirers—how much less from enemies—because every man's conscience tells him that he has committed, not one only, but many sins in his life-time. Yet the conscience of this pure and holy One never accused Him of one single error. He could say, speaking of God, "I do *always* those things that please Him." This perfect holiness is, then, a proof that He came from God, sent by Him to communicate to us a knowledge of His will, and to be a revelation of Him—to be His Word to us.

You will find some of the teaching of this great Master in the pages of this magazine every time it comes into your hands. We advise you always to read it very carefully, think about it, and lay it up in your heart. Thus drinking from the Well of Truth you will receive the best gift that God can give you, even *Life Eternal.*

A Talk about the Stars.

YOU may, perhaps, often have looked up at the sky, and you have seen on a clear night that it is covered with thousands of bright objects, but possibly you have never enquired what they are, and only say, when asked, "How should I know?" or "Who knows?" Are you like the little quail, over which a great round basket is placed, as the sky is over you, and which can see the light in little specks through the basket, just as you see the stars? Or are you of the opinion of the little child, who, when asked what the stars were, said she thought they must be the windows of the sky through which we were allowed to catch a glimpse of the bright glory of heaven? But first I must make sure that you can see the stars, because if you cannot see them, it will be rather difficult to explain what they are or anything about them; but if we can once agree upon what we can see before we start, we shall be able to get on quite easily.

Well, you say you can see the stars quite well, and the sky is covered with them. Yes, it is like a great map spread out before you, and it is not very difficult for you to make your own divisions of it. But you may say—how can anyone make a map of the sky, with divisions in it like a map of the land? Now supposing you were high up in the sky in a balloon, or in one of these new air-ships that are being made to fly in, and were looking down upon the Lahore and Amritsar districts, you might say—where is the boundary between the two districts, or between this thanna or that one, as shown in the map? There is no wall or ditch all round them to mark them on land, but there are little pillars and other marks here and there on the land, and when a map of it is made, all those pillars and marks are joined together by a line which encloses the district or thanna, so that the boundary between them can be seen, and the divisions distinguished. In the same way you see a group of stars in a certain part of the sky, and you want to separate the field it is in from that of another group near it. You fix upon a few stars surrounding the group, and say that the line connecting them is the boundary line of the field containing the group, and so on for others, till there is no space remaining that you have not made a map of for yourself, just as engineers have made maps of the Panjab, with its districts and tahsils and thannas.

But the map of the sky has already been made for you from very ancient time by several nations, even by your own nation, and the names also given to the divisions are

யும் தன்மேல் மிக அபிமானம்வைத்த அன்பர்களையும் பார்த்து அப்படிக் கேட்கத் துணிந்ததேயில்லை. தன்மேல் பகைவைத்தவர்களை அப்படிக் கேட்க எப்படி மனம் வரும்? ஏனெனில், ஒவ்வொரு மனித உள்ளத்திலும் தான் ஒரே பாவமல்ல பல ஏராளமான பாவஞ்செய்த ஞாபகம் இருக்கிறது. இந்தப் பரிசுத்தருடைய உள்ளமோ ஒரு பாவத்தையும் அறியாது. அவர் 'தேவனுக்குப் பிரியமானதையே நான் எப்பொழுதும் செய்கிறேன்' என்று சொன்னார். இந்தக் குறைவில்லாத பரிசுத்தமே அவர் தேவனை நமக்கு வெளிப்படுத்த—உள்ளபடி சொன்னால், தேவனை நமக்கு வெளிப்படுத்துகிற வார்த்தையாகவே இருக்க—அவர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்று ரூபிக்கும்.

இந்தப் பத்திரிகை உங்கள் கைக்கு வருந்தோறும் இந்த மகா குருவின் உபதேசம் ஏதேனும் அதிலிருக்கும். அதை மிகக் கவனம்வைத்துப் படித்து ஞாபகத்தில் வைத்து நினைத்துக்கொண்டிருக்க உங்களுக்கு யோசனை சொல்லுகிறோம். சத்திய ஊருணியில் இப்படிக் குடித்துவருவீர்களாயின், தேவன் மனிதருக்கு அளிக்கிற உத்தம வரமாகிய நித்திய ஜீவனை அடைந்துகொள்வீர்கள்.

விண்மீன்களைப்பற்றி ஓர் சல்லாபம்

நிலாம்பரமான இரவில் விண் மண்டலத்தை அண்ணாந்துப் பார்த்து அங்கே ஆயிரத்தாயிரம் ஜோதிகள் மினுக்குவதைப் பலமுறை பார்த்திருப்பாய்: அவை என்னவென்று கேட்டறிந்திருக்க மாட்டாய். யாராகிலும் கேட்டால், 'எனக்கெப்படித் தெரியும்?' 'யாருக்குத் தெரியும்?' என்று சொல்லியிருப்பாய். ஒரு காடையைப் பிடித்துப் பஞ்சரத்தில் அடைத்துவைத்தால், கவிந்திருக்கிற அந்தக் கூடைத் துவாரங்கள் வழியாய் விளக்கு வெளிச்சம் பல ஒளிப்புள்ளிகளாய் அதற்குத் தெரியும். அப்படியா உனக்கு நட்சத்திரங்கள் தெரியும்? ஒரு சிறு பெண்ணை நட்சத்திரங்களைக் காட்டி, அவை என்னவென்று கேட்டபோது, மோட்ச வுலகின் மகிமையை நமக்கு ஒருவாறு கண்ணுக்கு எட்டும்படி செய்கிற விண்டலஜன்னல்கள் என்றாள். விண்மீன்களைப் பார்க்க உனக்கு முடியுமோ என்னவோ, அது முந்தி எனக்குத் தெரியவேண்டும். முடியுமானால் நம் பாடம் செம்மையாய் நடக்கும்.

வான்மீன்கள் எனக்கு நன்றாய்த் தோற்றமாகின்றன, ஆகாயமெல்லாம் அவைகளால் நிறைந்திருக்கின்றனவே என்பாய். விரித்த தேச உருப்படம் போல் அது தோன்றுகிறது மெய்தான். அதைப் பகுதிப் பகுதியாய்ப் பிரித்துக்கொள்ள உன்னால் முடியும். தேச உருப்படத்தை மாகாணங்களாய்ப் பிரிக்கிறதுபோல ஆகாயத்தை மாகாணங்களாய்ப் பிரித்து உருப்படம் வரைய ஆராலாகும் என்பாய். ஏதேனும் புகைக்கூண்டிலாவது இப்போது மனிதர் ஏறிப் பிரயாணம்செய்ய உண்டாக்கப்படும் ஆகாயக் கப்பலிலாவது ஏறி, தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களைக் கீழேயிருக்க நீ காண்கிறாய் என்று வைப்போம். ஜில்லாக்களைப் பிரித்துப் படத்தில் காட்டியிருக்கிறதே, அப்படி உள்ளபடி பிரித்துக் காட்டுகிற எல்லை கண்ணுக்கு அகப்படவில்லையே, அது எங்கே? ஜில்லாக்களைச் சூழ்ந்து எல்லைப் பிரிக்கிற சுவர்களுமில்லை, அகழ்களுமில்லை என்பது மெய்யே. ஆனால் சிறு சிறு ஸ்தம்பங்களும் வேறு குறிகளும் இருக்கப் பார்ப்பாய். இந்த ஸ்தம்பங்களையும் குறிகளையும் கோடு கிழித்து இணைத்தால் அந்த ஜில்லாக்களுக்கு எல்லைத் தெரியும், அதினால் அவைகளை வேறு பிரித்தறியலாம். இப்படித்தான் ஆகாயத்தின் ஒரு பகுதியிலே ஒரு நட்சத்திரக்கூட்டம் இருப்பதைக் காணலாம். அதற்கருகில் இன்னொரு நட்சத்திரத் தொகுதியிருக்கும். அந்தக் கூட்டம் இருக்கிற களத்தை வேறு, இந்தக் கூட்டம் இருக்கிற களத்தை வேறு இஷ்டம்போல் பிரித்துக் காட்டலாம். அந்த முந்தின தொகுதியைச் சூழ்ந்துள்ள சில மீன்களைப் பொறுக்காய் இலக்கு வைத்துக்கொண்டு அவைகளை இணைக்கிற கோட்டையே அதற்கு எல்லையாகச் சொல்லமுடியுமல்லவா? மற்றக் கூட்ட நட்சத்திரங்களையும் இப்படியே எல்லை வகுத்துக் காட்டலாம். இப்படி நிலமறிவிற்பன்னர் தஞ்சாவூர் ஜில்லாவைத் தாசில்தாசிலாகப் படம் வகுத்துக் காட்டுகிற மாதிரியே நீயும் முழு ஆகாயமண்டலத்தையும் ஒரு இடம் பாக்கிவிடாமல், படம் வகுத்துக் காட்டலாகும்.

நீ யொருபடம் வகுக்கத் தேவையில்லை. வெகு பூர்வமுதல் பல தேசத்து மனிதர்களும் உனக்காக ஆகாயப்படம் வரைந்து வைத்திருக்கிறார்கள்.

the same, or with very little difference, so that there is not one single division that has not got a name, which is generally that of a bear, or a horse, or a fish, according to the fancied resemblance of some group in that division to such and such an animal or thing. This, then, is the first thing to remember, that the whole sky has been already mapped out, and that there is no part of it which has not got a name: that the names given to the divisions are almost always the same in every nation, because the forms of the groups do not change.

But when we say that the forms of the groups of stars do not change, we do not mean that their position in the heavens is not changed. We see the sun and the moon rise in the east and set in the west, and we see the stars doing the same. But we do not see the same groups of stars every season, for on a summer's night you can see the sky studded over with very different groups from what you can see on a winter's night, and yet as the winter night is getting towards morning, you can easily recognise the same groups you saw in the summer night coming up in the east. Then you lose sight of them, because the light of the sun will not allow you to see them any more. This does not mean that because you cannot see them they are not in the sky. No, you know they must be there all the time, and will set in the west as they did before, when you saw them on the summer's night. But that you may actually prove this for yourself, you must carefully watch some particular group of stars rising in the evening at the same place where the sun rose in the morning, which you know is the east, until it sets before dawn in the same place, the west, where the sun set in the evening. That is the same thing as saying that you are watching one group of stars which is in the same path that the sun was in, because he rises in the east and sets in the west. You will soon become quite accustomed to its shape and recognise it always afterwards whenever you see it. Then watch another group which follows it in the same path until you will always know it again, and so with others. You will soon observe that the first group you watched will rise again the next evening in the same place, about the same time. This shows you that the whole sky has been moving round with these groups (though after they have set in the west you cannot see them any longer), because you see them coming up again in the same order and in the same place as the evening before. So you learn that it takes about twenty-four hours for the same group to come round to the same place. You have seen it coming up and up, till it is high in the sky, and then you see it going down and down, till it disappears where the sun set in the west, have you not? "Oh, yes," you say, "that is quite true." Now when it goes down, where does it go to?

It will take more room than we have here to answer this question, but you will find the answer in the next number of this magazine, so look out then for another talk about the stars.

உன் சுயதேசத்தாரும் அப்படிச் செய்திருக்கிறார்கள். அந்தந்த ஆகாயப் பகுதிக்கு அவர்களிட்டிருக்கிற பெயர்களும் ஒரேமாதிரிப் பெயர்கள்தான். எங்கேனும் சிறிது வித்தியாசப்பட்ட பெயர்களிருந்தாலு மிருக்கும். பெயரில்லாத ஒரு சிற இடப்பிரிவும் ஆகாயமண்டலத்தில் இல்லை. அந்தந்தப் பிரிவில் இருக்கிற நட்சத்திரத் தொகுதி, பார்ப்பவர் கண்ணுக்குக் காடிபோலவோ, குதிரைபோலவோ, மச்சம்போலவோ எப்படி மனபாவமாகிறதோ அப்படிப் பெயர் பெறும். ஆகாயமண்டலம் முழுமையும் உருப்படம் வரையப்பெற்றிருக்கிறது, ஒவ்வொரு உருவுக்கும் பெயரிருக்கிறது, பெயரில்லாத ஆகாயப் பகுதி கிடையாது என்னும் இதனையும், ஒவ்வொரு தொகுதியின் உருவமும் எத்தேசத்தார் பார்வைக்கும் மாறாமல் ஒரேமாதிரியாய்த் தோற்றுகிறதினால் எத்தேசத்தாரும் அததற்கு இட்டிருக்கிற பெயர்களும் எப்போதும் ஒரே பெயர்தான் என்னும் இதனையும் நீ முதற்பாடமாய்ப் படித்து மனதில் வைத்திருக்கவேண்டும்.

நட்சத்திரத் தொகுதிகள் அல்லது நட்சத்திர ராசிகள் உருமாறுகிறதில்லை என்றோமே, அதினால் அவை வானவீதியில் இடம் மாறுகிறதில்லை என்று நினைக்கலாகாது. சூரிய சந்திரர்கள் கிழக்கில் உதித்து மேற்கில் அஸ்தமிக்கக் காண்கிறோம். நட்சத்திரங்களும் அந்த நடையை அநுசரிக்கப் பார்க்கிறோம். வருஷத்தைப் பர்வம் பர்வமாய்ப் பிரித்திருக்கிறோமல்லவா? அந்தப் பர்வங்கள் ஒவ்வொன்றிலும் ஒரே ராசியைப் பார்க்கமாட்டோம். கோடைப்பர்வத்தில் ஒரு ராசி வானத்திலிருக்கும், பனிகாலத்தில் வேறொரு கூட்டம் வானத்தில் தெரியும். ஆயினும், பனிகால இரவு கழிந்து விடிகிற வேளையில் நீ முன் கோடைகாலத்தில் கண்ட நட்சத்திரராசிகள் கிழக்கில் உதிக்கிறதைப் பார்க்கலாம். உடனே அவைகள் மறைந்துபோம். ஏனெனில், சூரியனின் ஒளி அவற்றைத் துலங்காமல் மழுக்கிவிடும். அப்படி அவை கண்ணுக்கு மறைந்துபோகிறதைக் கண்டு, அவை அப்புறம் ஆகாய மண்டலத்தில் இல்லாமற்போயின என்று நினைக்கலாகாது. அப்படியல்ல, அவை தோன்றாதபோதிலும் அங்கேதான் இருக்கின்றன. வர வர மேற்கு நோக்கிச் சென்று முன் கோடைப்பர்வத்தில் கண்ணுக்குத் தெரிய மேற்கில் அஸ்தமித்தபிரகாரமே அவை இப்போதும் மேற்கில் கண்ணுக்குத் தெரியாமல் அஸ்தமிக்கின்றன. இது உன் புத்திக்கு நிலைவரப்படும்பொருட்டு, ஏதாவது ஒரு நட்சத்திர ராசியை இலக்குவைத்துப் பிரித்து அது காலையில் சூரியன் உதித்தது எவ்விடமோ அவ்விடத்திலேயே மாலையில் தானும் உதித்துப் பொழுது புலருமுன் அது சூரியன் முந்தினநாள் மாலையில் எவ்விடத்தில் அஸ்தமித்ததோ அவ்விடத்தில் அஸ்தமிக்கிறதைப் பார்த்துக்கொள்ளவேண்டும். வேறுவிதமாய்ச் சொன்னால், சூரியன் கிழக்கே உதித்து மேற்கே அடைவதுபோல, அந்தப் பகலோன் நடந்த பாட்டையையே தனக்கு அடிச்சுவடாக வைத்து நீ பகுத்துப் பிரித்து எடுத்துக்கொண்ட ஒரு நட்சத்திர ராசி நடக்கிற பாட்டையை நீ கவனித்தறிகிறாய். இப்படிப் பழகப் பழக அந்த ராசியின் உருவம் சீக்கிரத்தில் உன் மனதில் பதிந்துபோகும். அப்புறம் அதை எப்போது கண்டாலும் அதின்னது என்று சொல்லிவிடுவாய். இப்படியே, ராசி ராசியாய்க் கவனித்து உருவை மனதில் பதிவித்து, எல்லா ராசிகளையும் இன்னது என்று உடனே சொல்ல அறிந்துகொள்ளலாம். வர வர நீ முதலில் கண்ட ராசி மறுநாளிலும் அதேகாலத்தில் அதே இடத்தில் சாயந்திரத்தில் தோற்றமாவதைப் பார்த்தறிந்துகொள்வாய். இது என்ன காண்பிக்கிறதென்றால், ஆகாயவீதி முழுமையும் அதில் இருக்கிற இராசிகளைத் தூக்கிக்கொண்டு சுழல்கிறது என்பதைக் காண்பிக்கிறது. இராசிகள் மேற்கே அஸ்தமித்தபின் அவற்றைப் பார்க்க முடியாதுதான். ஆகாயவீதி சுழல்கிறது எதினால் தெரியும் என்றால், இராசிகள் முந்தினநாட் சாயந்திரத்தில் எங்கே தோன்றினவோ அதே இடத்தில் எப்பொழுது தோன்றினவோ அதே பொழுதில் மறுநாட் சாயந்திரமும் எந்த வரிசையாய் வந்தனவோ அந்த வரிசையாகவே வருவதைப் பார்க்கிறோமே, அதினால் தெரியும். எந்த ராசியும் குறிப்புவைத்துப் பார்த்தால் வர வர எழும்பி உச்சிக்கு வந்து வர வர தாழ்ந்து முன் சூரியன் அஸ்தமித்த இடத்திலேயே அஸ்தமிக்கிறதை நீ பார்த்திருக்கிறாயல்லவா? 'பார்த்திருக்கிறேன் நீர் சொல்வது மெய்தான்' என்கிறாய். நல்லது அது அஸ்தமிக்கையில் எங்கே போகிறது? இதற்குத்தரவு விரியும், இங்கு இடம் போதாது. மறு சஞ்சிகையில் வரும், அது வரும்போது நட்சத்திரங்களைக்குறித்த இரண்டாம் சல்லாபமிருக்கிறதா என்று தேடிப் பார்.

PRINTED AT THE C. L. S. PRESS, MADRAS—1912

His Imperial Majesty

KING GEORGE V,

in Coronation Robes.